# மனனப் பகுதி - தரம் 9

## திருவிவிலியப் பகுதி

1. மெல்கிசெதேக்கின் முறைப்படி நீர் என்றென்றும் குருவே' என்று ஆண்டவர் ஆணையிட்டுச் சொன்னார், அவர் தம் மனத்தை மாற்றிக் கொள்ளார். (தி.பா 110:4)

2. இயேசு தம் சீடர் பன்னிருவரையும் தம்மிடம் வரவழைத்தார். தீய ஆவிகளை ஓட்டவும், நோய் நொடிகளைக் குணமாக்கவும் அவர்களுக்கு அதிகாரம் அளித்தார். (மத்தேயு 10:1)

3. "இந்தக் கிண்ணம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற எனது இரத்தத்தால் நிலைப்படுத்தப்படும் புதிய உடன்படிக்கை." (லூக்கா 22:20)

4. எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். (மத்தேயு 28.19)

5. என் சட்டத்தை அவர்கள் உள்ளத்தில் பதிப்பேன், அதை அவர்களது இதயத்தில் எழுதிவைப்பேன். நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன் அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள். (எரேமியா 31:33)

6. எனக்கு நீங்கள் குருத்துவ அரசாகவும், தூய மக்களினமாகவும் இருப்பீர்கள். (வி.ப. 19:6)

7. "தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். (லூக்கா 1:35)

## திருத்தூதர் நம்பிக்கை அறிக்கை

8. பொந்தியு பிலாத்தின் அதிகாரத்தில் பாடுபட்டு சிலுவையில் அறையப்பட்டு இறந்து அடக்கம் செய்யப்பட்டார். பகுதி – (4)

9. பாதாளத்தில் இறங்கி மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். பகுதி – (5)

10. தூய கத்தோலிக்கத் திருச்சபையையும் புனிதர்களுடைய சமூக உறவையும் நம்புகிறேன். பகுதி – (9)